(3) தகவல் கோரல்.

உரிமைப் பிரச்சினை குறித்து.

*திரு. க. அன்பழகன் : நேற்று முன்னாள் ஓர் உரிமை மீறல் குறித்த தீர்மானத்தை தங்கள் மூலமாக ஒரு முடிவு பெற வேண்டுமென்று தந்திருக்கிறேன். நேற்று முன்னாள் தந்திருந்தேன். நேற்று முன்னாள் தந்த காரணத்தினால் இந்நாள் வரவேண்டியது நியாயம் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு வந்திருக்கின்றன. இன்னும், முழு விவரங்கள் கேட்டு வரவில்லை. திங்கட்கிழமை அவசியம் பேராசிரியர், சாதிக் பாட்சா அவர்கள் இருவரும் கொண்டு வந்ததையும், மற்றொரு உறுப்பினர் கொண்டு வந்ததையும் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் காலம் எடுத்துக் கொள்வது பற்றி எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் உடனுக்குடன் இப்படிப் பட்ட பிரச்னைகள் அவையில் தீர்மானிக்கப்படுமானால் தான் இந்த அவைக்கு பெருமையே தவிர கால நீடிப்பு என்பது உரிமை மீறல் பிரச்னைகள் வேறு பல வளர வாய்ப்பாகப் போய் விடும். நான் தந்த பிரச்னையாக இருப்பதால் நீங்கள் திங்கட்கிழமை தரு கிற முடிவு வரையில் நான் பொறுத்திருக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஆசிரியருக்கு அனுப் பியிருக்கிறேன். உடனே வந்து தகவல் தரும்படி, நேராக வந்து தகவல் சொல்லும்படி கேட்டிருக்கிறேன். அவர் இன்னும் வர வில்லை. பத்திரிகை ஆசிரியர்கள் இனி துரிதமாக சொன்னபடி இத்தனை மணி நேரத்திற்குள் பதிலளிக்க வேண்டுமென்று சொன் னால் அதற்குள் பதிலளித்தால் அன்று அல்லது அதற்கு மறுநாள் நான் தீர்ப்புத் தர முடியும். அந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தங்களுடைய மேலான ஆலோசனையை நான் ஒரு வகையில் வரவேற்கிறேன். இன்னொரு வகையில், அச்சிடப்பட்ட பத்திரிகை, சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பு இவை இரண்டையும் பார்க்கிறபோது ஏற்படுகிற வேற்று மையை தலைவர் அவர்கள் பார்த்து அதில் உரிமை மீறல் இருக்கி கிறதா என்று பார்த்து தீர்மானிக்க வேண்டும். உரிமை மீறல் இருக்கிறது என்று தீர்மானித்ததற்குப் பிறகுதான் ஆசிரியர் அல் லது நிருபர் அல்லது மற்றவர்களை அழைத்து கேட்பது இயற்கை, நியாயம். முதலில் அவைக்குத் தெரிவித்து விட்டு உரிமை மீறல் இருக்குமானால் ஆசிரியரை அழைத்தால் அது பொருத்தமாக இருக் கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் சொல்கிற கருத்துக்கள் எனக்கு நன்ருகப் புரிகிறது. அவையில், இன்ஞர் இன்ஞர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிருர்கள், அதை சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறேன் என்ற தகவல் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறீர்கள். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதை ஆசிரியரைக் கூப்பிட்டுப் பேசி பதில் வந்த பிறகு நீங்கள் சொன்னபடி அவைக்கு அறிவிக்கலாம்.

திரு. க. அன்பழகன் : உரிமை மீறல் என்பது சட்ட மன்றத்தினுடைய முதல் உரிமை. சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையில், உரிமை மீறல் இருக்கிறதா அல்லவா—ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா—என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் தலைவர் அவர்கள். தீர்மானிக்கிறபோது தேவையான தகவல்களை, பத்திரிகைகளில் அச்சிட்டு வந்திருக்கிற செய்தி, மற்ருென்று, சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டில் காணப்படுகிற, டைப் அடித்து தரப்படுகிற செய்தி, இரண்டையும் தாங்கள் முதலில் பார்க்கக்கூடிய எல்லா விதமான உரிமையும் வாய்ப்பும் பெற்றிருக்கிறீர்கள். தங்களுக்கு உதவுவதற்கு அலுவலர்கள் இருக்கிருர்கள். நாங்களும் அந்தக் குறிப்பைத் தங்களிடம் தந்திருக்கிருேம். எனவே அந்தக் குறிப்புகளைப் பார்த்தவுடன் உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவரும். அந்த அடிப்படையில் தெரிவித்து விட்டு அதற்கு மேல் உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் கருதினுல் ஆசிரியர் அழைக்கப் படவேண்டுமே தவிர இது உரிமை மீறல் அல்ல, இப்படி நடப்பது உலக இயற்கை என்று தங்களுக்குத் தோன்றினுல் ஆசிரியரை அழைக்கத் தேவை இல்லை. உரிமை மீறல் யார் மீது கொடுத்திருக்கிறேனே அவர் சார்பாகவும் இதைப் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : ஒரு வேளை பேராசியர் அவர்கள் வாய் தவறிப் பேசியிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். உரிமை மீறல் என்பது இந்தச் சபையின் உரிமை என்று அவர்கள் ஆரம்பித்தார்கள்.

திரு. க. அன்பழகன் : நான் தவறிய இடத்தில் திரு. மனேகரன் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று முன்னவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது ஆசிரியருக்கு அனுப்பினேனே அப்போது அது உரிமை மீறல் இருக்கிறது என்ற அர்த்தத்தோடு அனுப்பியது. இப்போது வேறு சொல்லிவிட்டு பிறகு ஆசிரியரை அழைத்து அவர்களிடம் கேட்டு அவர் மன்னிப்பு அல்லது தவறு செய்து விட்டேன் என்று எழுதிக் கொடுப்பதை மறுபடியும் அறிவிக்கிற இரட்டை வேலை வேண்டாம் என்று எண்ணித்தான் அவற்றை ஆசிரியரிடம் அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் அவைக்கு அறிவிக்க இருக்கிறேன்.